செ.வெ.எண்:28 நாள்:12.10.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10 வட்டாரத்திற்கு தலா 3 முகாம்கள் வீதம் 30 இடங்களில் "கலைஞரின் வருமுன் காப்போம்" திட்ட முகாம்கள் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13 இலட்சத்து 03 ஆயிரத்து 716 நபர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர்.**

**இதுவரை நடைபெற்ற ஐந்து மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 141 நபர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், பர்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (12.10.2021) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் "**கலைஞரின் வருமுன் காப்போம்**" சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஒய்.பிரகாஷ், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்து, கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட பதிவு அட்டையை வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவ சேவை அளிக்கும் "**கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்**" என்ற சிறப்பான திட்டத்தை 29.09.2021 அன்று சேலம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் அனைத்து கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சியில் உள்ள மக்கள் அனைவரும் பயனடைவர்.

இத்திட்ட முகாம்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு பொது சுகாதாரம், மருத்துவக் கல்வி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், குடும்பநலம், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு கழகம், கண்பார்வை இழப்பு தடுப்பு நிறுவனம், சமூக நலத்துறை, கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றம் நகராட்சி நிர்வாகத்துறை போன்ற துறைகள் இணைந்து செயல்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டமான "**கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்**" மருத்துவ முகாம்கள் ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம் வீதம், 10 வட்டாரத்திற்கு 30 முகாம்கள் நடைபெற உள்ளது.

இந்த முகாமில் இருதயநோய் நிபுணர், அறுவை சிகிச்சை மருத்துவர், எலும்பு மருத்துவர், காது, மூக்கு, தொண்டை நிபுணர், கண் மருத்துவர், பல் மருத்துவர், குழந்தை நல மருத்துவர், சிறுநீரக மருத்துவர், தோல் மருத்துவர், சித்த மருத்துவ பிரிவு, மனநல மருத்துவர், மாற்றுத்திறனாளிகள் மருத்துவ பிரிவு, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் மற்றும் பெண்கள் சிறப்பு மருத்துவர் கலந்து கொண்டு பரிசோதனை செய்து நோயைக் கண்டறிந்து, தேவைப்படுவோருக்கு உயர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு தமிழக முதல்வரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் உரிய சிகிச்சை அளிக்கப்படும்.

**வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாமில் அளிக்கப் படும் சிகிச்சை விவரங்கள்**

**முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டம்**

தேவைப்படுவோருக்கு அடையாள அட்டை உயர்வகை இரத்தபரிசோதனை மற்றும் பன்னோக்கு சிறப்பு சிகிச்சை கட்டணமின்றி வழங்கப்படும். மேலும், ஸ்கேன் பிரிவில் சீறுநீரக கல் உள்ளிட்ட கோளாறுகள் கண்டறிந்து குழந்தைகள் வளர்ச்சி கண்டறியப்படும்.

**அறுவை சிகிச்சை மற்றும் எலும்பு சிகிச்சை:**

பொது அறுவை கோளாறுகள் மற்றும் எலும்பு சம்பந்தமான சிகிச்சைகளும், இயன்முறை சிகிச்சைகளும் வழங்கப்படும். பொது மக்கள் அவைருக்கும் மருத்துவ பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவ சிகிச்சை எளிதில் கிடைக்க செய்தல். நோய்களுக்கான பரிசோதனை மற்றும் உடல் நலம் குறித்த ஆலோசனை வழங்குதல். அதிநவீன பரிசோதனை சாதனங்களால் நோய்களை கண்டறிதல். நோய்கண்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளித்தல்.

**இரத்தம் (எச்.பி) Hemoglobin அளவு அனைவருக்கும் கண்டறிதல்**

இரத்த அழுத்தம் பரிசோதனை (30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு) கண்டறிதல். இரத்தத்தில் சர்க்கரை அளவு பரிசோதனை கண்டறிதல் (30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 18-29 வயதிற்குரியவர்களுக்கு தேவையிருப்பின்). இரத்தத்தில் கொழுப்பின் அளவீடு பரிசோதனை கண்டறிதல். மலேரியா இரத்தத்தடவல் பரிசோதனை கண்டறிதல்.

**இ.சி.ஜி (இதயத் துடிப்பு அளவு), சுருள் படம் கண்டறிதல்.**

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை (PaP Smear) கண்டறிதல். அல்ட்ரா சோனாகிராம் கர்ப்பிணிகள் அனைவருக்கும் (மற்றவர்களுக்கு பரிந்துரையின் பேரில்) கண்டறிதல். கண்புரை ஆய்வு மற்றும் பார்வைக் குறைபாட்டிற்கு இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்குதல். செமி ஆட்டோ அனலைசர் மூலம் இரத்த பரிசோதனைகள்

மற்றும் முக்கிய பரிசோதனைகள் கண்டறிதல். கொரோனா தடுப்பூசி வழங்குதல். குழந்தைகளுக்கு மற்றும் தாய்மார்களுக்கு இதர தடுப்பூசி வழங்குதல். கொரோனா சம்பந்தமாக சளி பரிசோதனை செய்தல் மற்றும் காசநோய் பரிசோதனை செய்தல்.

சித்த மருத்துவப்பிரிவு

தேவைப்படும் நபர்களுக்கு நாட்பட்ட நோய்களுக்கு உண்டான மருந்து மாத்திரைகள் வழங்கப்படும்.

எனவே, பொது மக்கள் அனைவரும் இம்முகாம்களில் கலந்து கொண்டு தங்கள் உடல் நலத்தை **"கலைஞரின் வருமுன் காப்போம்"** என்ற நோக்கத்தில் தங்களது உடல் நலம் சார்ந்த உரிய பரிசோதனைகள் செய்து பயனடைய வேண்டும். மேலும், மழை காலத்தில் தங்கள் வீடுகளில் உள்ள குடிநீர் தொட்டி, குளிர்சாதனபெட்டி, பழைய சாமான்கள், தேங்காய் ஓடு, பழைய மண்பாண்டங்கள், டயர்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க அவற்றை அகற்றி புழுக்கள் உற்பத்தியாவதை தடுத்து டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு கபசரகுடிநீர் வழங்கியும், மருத்துவம் சார்ந்த செயல் விளக்கம் மற்றும் டெங்கு நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கண்காட்சியையும், முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு இரத்த பரிசோதனை, இ.சி.ஜி. பரிசோதனை, மனநல பரிசோதனை, குழந்தைகள் நலம் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளை பார்வையிட்டு, 50 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு சடங்குகள் செய்து, வளையல் அணிவித்து சீர் வரிசை பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பி.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கோவிந்தன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.நா. மணிமேகலை நாகராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஜி.சுகவனம், திரு.வி.வெற்றிசெல்வன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திரு.வி.ஜி.ராஜேந்திரன், பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.டி.பாலன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு.தம்பிதுரை, வட்டார மருத்துவ அலுவலர் மரு.பி.சி.சிவகுமார், வட்டாட்சியர் திரு.பிரதாப், பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கிங்ஸ்டன், மருத்துவர்கள், செவிலியர்கள் உடன் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**